# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 243/20—1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා—1976.12.17

243/20 ம் இலக்கம் — 1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண். பிளியு. 68(70)/76.

### பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் முதலமைச்சரின் விதப்புரையின்மேல் சனாதிபதியவர்களினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

வி. கொபல்லவ,
சனாதிபதி

சனாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு,
1976, திசெம்பர் 17 ஆந் தேதி.

### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள், அவசரகால (தெங்குப் பொருள்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள் வலுவுடையனவாகத் தொடர்ந்திருந்து வரும் காலத்தின்போது ஆள் எவரேனும் கொப்பறாவை அல்லது தேங்காய் எண்ணெய்யை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்வதற்கு, அவர்க்கு அனுமதி வழங்கும் உரிமம் பெற்றவராயிருப்பினும் கொப்பறாவையோ தேங்காய் எண்ணெய்யையோ ஏற்றுமதி செய்தலாகாது ;

ஆயினும், முற்போந்த ஏற்பாடுகளானவை—

(அ) 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தெங்குப் பொருள் சந்தைப்படுத்தற் சபையினால் வழங்கப்பட்ட ஒன்றோ அதற்கு மேற்பட்டவோ உள்ள செல்லுபடியான ஏற்றுமதி உரிமங்களின்மீது 1,50,000 மெற்றிக் தொன்னுக்கு மேற்படாத மொத்தத் தொகை கொண்ட தேங்காய் எண்ணெய்யை 1973 திசெம்பர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடர்ச்சி ஏற்றுமதி செய்வதற்கும் ; அத்துடன்

(ஆ) 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தெங்குப் பொருள் சந்தைப்படுத்தற் சபையினால் வழங்கப்பட்ட ஒன்றோ அதற்கு மேற்பட்டவோ உள்ள செல்லுபடியான ஏற்றுமதி உரிமங்களின் மீது 3,048 மெற்றிக் தொன்னுக்கு மேற்படாத எஸ்டேட் I ஆந் தர கொப்பறா மொத்தத் தொகையினை 1974 யூலை 10 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடர்ச்சி ஏற்றுமதி செய்வதற்கும்.

ஏற்புடையனவாகா.

3. தேங்காய் எண்ணெய்யின் ஆலையாளரொருவராகத் தொழில் கொண்டு நடாத்துபவரும், 1972 மே 5 ஆந் தேதிய 15,009/1 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட, 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கத் தெங்கு அபிவிருத்தி ஒழுங்குவிதிகளின் 2 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் அத்தகையவராகப் பதிவுசெய்துகொள்ளும்படி தேவைப்படுத்தப்பட்டுள்ளவருமான ஆளொவ்வொருவரும், அவரால் உற்பத்தி செய்யப்படும் அல்லது அவரது உடைமையில் இருக்கும் தேங்காய் எண்ணெய் முழுவதையும் 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட தெங்குப் பொருட் சந்தைப்படுத்தற் சபையிடம் அல்லது அத்தகைய எண்ணெய்யைப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு சொல்லப்பட்ட தெங்குப் பொருட் சந்தைப்படுத்தற் சபையினால் அதிகாரம் அளிக்கப்பெற்ற எவரேனுமாளிடம் ஒப்படைக்கும்படி இத்தால் தேவைப்படுத்தப்படுகிறார். தெங்குப் பொருட் சந்தைப்படுத்தற் சபைக்கு அல்லது அச்சபையின் கட்டளைக்கிணங்க ஒப்படைக்கப்பட்ட தேங்காய் எண்ணெய்க்குக் கொடுபடவேண்டிய விலையானது, தெங்குப் பொருட் சந்தைப்படுத்தற் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுக் கூட்டுத்தாபனத்திற் பதிப்பிக்கப்பெற்றது.